Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Nedunal Vadail Panpattu Koorukal

**Dr. V. Rilbert Jenarthanan**, Assistant Professor, Tamil Research Centre,
St.Xavier's College, Palayamkottai, Tirunelveli, Tamilnadu, India
ORCiD: https://orcid.org/0000-0002-6690-9968
**DOI: 10.5281/zenodo.7312972**

## Abstract

*Sangam literature is rich in ideas and imagination. It explains the life of Tamils. The literature of Nedunalvadai in Patuppattu is not only conceptual but also conveys cultural messages with imaginative concentration. Sangam literature is rich in ideas and imagination. It explains the life of Tamils. The literature of Nedunalvadai in Patuppattal is not only conceptual but also conveys cultural messages with imaginative concentration. This article examines the culture of saying nedunalvadai. This article examines the culture of saying nedunalvadai.*

**Keyword:** Culture, Nedunalwadai, Sangam Literature, Tolkappiyam.

## References

[1] Kathir Mahadevan, Tamil Pandu, Nataraj Publication, New No. 64-14 Meerbakti Ali Street, Rayapetta, Chennai – 600014, First Edition 1998
[2] Kathir Muruku (U.A.), Mukudapallu Source and Text, Sarada Publishing House, Chennai-600014, Third Edition, July-2009
[3] Shanmugam Pillai.MU (U.A.), Kurundogai, Tamil University, Thanjavur, Revised – 1994.
[4] Subramanian S.V.(U.A.), Bathuppattu, Govinur Monastery, Kovilur – 630307.
[5] Puliyurkesikan (U.A.), Study Source and Text, Sri Senpaha Publishing House, Bandibazar, Chennai-600 017, Revised, August 2010
[6] Puliurkesikan (U.A.), Silapathikaram, Sri SS. Print House, 455, Tanappa Reddy Street, Tiruvallikeni, Chennai – 600005. Fifteenth Edition, March 1993
[7] Narayanasamy I.A., The Four Hundred Sources and Texts of Narita, Tirunelveli South Indian Saiva Siddhanta Literature Society, 522, DDK Road, Chennai, Revised 2001
[8] Somasundaranar Bo.Ve, Nedunalvadai, source and text, Tirunelveli South Indian Saiva Siddhanta Literary Society Ltd, 79, Prakasam Road, Chennai – 600108. Reprinted May 1984
[9] Tamilmudi (U.A.), Thirukkural Commentary, Tamilmudi Station, H.10, K.Ponnambalam Colony, KK Nagar, Chennai – 600 078.
[10] Tamizhannal (U.A.), Tholkappiyam Mahadthikaram, Manivasakar Publishing House, 31, Sivakar Street, Barimuna, Chennai – 600105, Second Edition, October 2006.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நெடுநல்வாடையில் பண்பாட்டுக் கூறுகள்

**முனைவர் வ. ரில்பர்ட் ஜெனார்த்தனன்,** உதவிப்பேராசிரியர், தமிழ் ஆய்வு மையம்
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-6690-9968**
**DOI: 10.5281/zenodo.7312972**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்கள் கருத்து வளமும், கற்பனைச் சிறப்பும் பெற்று வழங்குகின்றது. இது தமிழருடைய வாழ்வியலை விளக்கி நிற்கின்றது. பத்துப்பாட்டில் நெடுநல்வாடை என்னும் இலக்கியமும் கருத்துச் செறிவு மட்டுமின்றி, கற்பனைச் செறிவும் கொண்டு பண்பாடு சார்ந்த செய்திகளையும் எடுத்துரைக்கின்றது. அவ்வாறு நெடுநல்வாடை கூறும் பண்பாடு பற்றி ஆராய்வதாக இக்கட்டுரையில் அமைகின்றது.*

**திறவுகோல்:** பண்பாடு, நெடுநல்வாடை, சங்க இலக்கியம், தொல்காப்பியம்.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் கருத்து வளமும், கற்பனைச் சிறப்பும் பெற்று வழங்குகின்றது. இது தமிழருடைய வாழ்வியலை விளக்கி நிற்கின்றது. பத்துப்பாட்டில் நெடுநல்வாடை என்னும் இலக்கியமும் கருத்துச் செறிவு மட்டுமின்றி, கற்பனைச் செறிவும் கொண்டு பண்பாடு சார்ந்த செய்திகளையும் எடுத்துரைக்கின்றது. அவ்வாறு நெடுநல்வாடை கூறும் பண்பாடு பற்றி ஆராய்வதாக இக்கட்டுரையில் அமைகின்றது.

**பண்பாடு**

பண்பாடு என்னும் சொல்லிற்கு பல்வேறு விளக்கங்கள் அறியப்படுகிறது. பண்பாடு என்பதற்கு விளக்கமாக பிரிட்டானிகா தகவல் களஞ்சியமானது.

> **பண்பாடு என்பது மனிதர்களுடைய மொழி, எண்ணங்கள், நம்பிக்கைகள், பழக்கங்கள், தடைகள், விதிமுறைகள், நிறுவன அமைப்புகள், கருவிகள், செயல்முறைகள் கலைப்பொருட்கள், சடங்குகள், விழாக்கள், அடையாளச் சின்னங்கள் போன்ற எல்லா அம்சங்களும் கலந்திருக்கும் கலவையே (பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், ப. 805)**

என்று குறிப்பிடுகின்றது. விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது பண்பாடாகும். கரடுமுரடான நிலத்தை விவசாயத்திற்கு எவ்வாறு மாற்றுவது பயன்படுத்துவது ஆகும். இதனைப் போன்றே மனிதனை தீய எண்ணங்களில் இருந்து மாற்றி உயர்ந்த எண்ணங்களோடு வாழச் செய்வதே பண்பாடு எனப்படும்.

**பண்பாடு சொல்லாட்சி**

பண்பாடு என்னும் சொல்லாட்சி பண்டையத் தமிழ் இலக்கியங்களில்

காணப்பெறவில்லை. இருப்பினும் பண்பு, பாடு என்னும் சொற்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்" (கலித்தொகை ப.-341) என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது. பண்பாடு என்னும் சொல் வழக்கு அண்மைக் காலத்து என்னும் அச்சொல் குறிக்கும் பொருட்கள் அக்காலத்திலேயே இருந்ததனை நற்றினைப் பாடல்.

**நயனும் நண்பும் நானும் நன்குடைமையும்**
**பயனும் பண்பும் பாடறிந் தொழுகுலும் (நற்றிணை, ப. 160)**

என்கிறது. அதாவது யாருடன் பழகுகின்ற தன்மையும், பிறரிடம் யாசிப்பதற்கு நாணுதலும், கொடைத்தன்மையும், பன அடக்கமும் பண்பாடு என்கிறது.

**நாகரிகமும் பண்பாடும்**

பண்பாடு என்னும் சொல்லினை பழந்தமிழர்கள், நாகரிகம் என்னும் சொல்லினால் வழங்கி வந்தனர். நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றே பண்பாடு நாகரிகமும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். நான் என்ற சொல், நற்பண்பினைக் குறிக்கின்றது. நம்மோடு நன்றாக பழகியவர்கள் விஷத்தினை தந்தாலும் அதை உண்பது பண்பாடாகக் கருதப்படுகிறது. இப்பண்பாடு நாகரிகம் என்ற பொருளில் வந்துள்ளதை,

**முந்தை யிடுந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞுசும் உண்பார் நனிநா கரிகர் (மேலது, ப. 197)**

என்ற நற்றினைப் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றது. இதனைத் திருவள்ளுவர்,

**பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பலர் (குறள். 580)**

என்று கூறுகின்றார். வாழ்க்கை நெறிமுறையின் வெளிப்பாடு நாகரிகம் எனப்படும். பண்பாடு என்பது பழக்க வழக்கங்களோடு நெருங்கிய தொடர்பினை வாழ்க்கை முறை ஆகும். புறத்தோற்றத்தில் ஏற்படும் வளர்ச்சி நாகரிகம் ஆகும். அகப்பண்புகளில் சிறந்து விளங்குவது பண்பாடு ஆகும்.

**பண்பாடுடையோர்**

உயர்வான எண்ணங்களும், நற்சிந்தனைகளும் உடையவர்களே பண்பாடுடையவர் ஆவர். உள்ளம் செம்மையானதாகவும் சிறந்ததாகவும், தூய்மையான எண்ணம் கொண்டதாகவும் இருந்தால் தான் உயர்வான சிந்தனை தோன்றும், இதனையே பாரதியார்,

**உள்ளத்தில் உண்மை ஒளிஉண்டாயின்**
**வாக்கினிலே ஒளி உண்டாகும் (பாரதியார் கவிதை, ப. 31)**

என்கிறார். எனவே பண்பாடென்பது நம் மனதின் உள்ளே ஏற்படும் வளர்ச்சியின் வெளிப்புறத் தோற்றம் ஆகும்.

தமிழரின் பண்பாடு மிகவும் ;பழமை வாய்ந்தது எனலாம். பழந்தமிழ் இலக்கியங்கள் நற்பண்புகள் வாழ்ந்த சான்றோர் உள்ளமையால் உலகம் நிலைப்பெற்றுள்ளது எனக் கூறுகின்றது. இதனையே புறநானூறு

**உண்டா லம்மலில் வுலக மிந்திரர்**
**அமிழ்த யியைல தாயினு மினி தெனத்**
**தமிய ருண்டலு மிலரே முனிகிலர்**
**துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்**
**புகழெனி னுயிரூங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்**
**அன்ன மாட்சி யனை ராகித்**
**தமக்கென முயலா நோன்றாட்**
**பிறர்க்கென முயலுந ருண்மை யானே (புறநானூறு, ப. 182)**

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது.

**பண்பாட்டுத் தன்மை**

மனித நாகரிகம் தோன்றிய காலத்திலேயே பண்பாடும் தோன்றிவிட்டது. பண்பாட்டுத் தன்மை என்பதும் மனிதனின் வாழ்க்கையோடு இணைந்தே காணப்படுகின்றது. அப்படிப்பட்ட பண்பாட்டினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை 1) அகப்பண்பாடு, 2) புறப்பண்பாடு, தமிழ்ப்பண்பாடு (ப.31). இதில் அகப்பண்பாடு என்பதில், காதலும், காமமும் அடங்குகின்றது. அதாவது ஒரு ஆணும், பெண்ணும் ஒருவரிபால் ஒருவர் அன்பு கொண்டு, அதன்பால் அனுபவிக்கின்ற இன்பமும், மேலும் இருவரும் பிரிந்து வாடுகின்ற பிரிவும் அகப்பண்பாட்டினுள் அடங்குகின்றது. ஈகை, வீரம், புகழ், அறம், ஒழுக்கம் இவையே புறப்பண்பாடு எனப்பட்டன.

**அகப்பண்பாடு**

ஒருவனும் ஒருத்தியும் ஒத்த அன்பினராய் தாம் கூடி அனுபவிக்கின்ற இன்பம் ஆனது இன்னது என்று பிறருக்கு எடுத்துக் கூறவியலாத தன்மையை உடையது.

தலைவன், தலைவி இருவருக்குமான இலக்கணத்தை தொல்காப்பியம்,

**பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ**
**டுருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே யருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல்.பொருளதிகாரம், நூ. 269)**

என்கிறது, அதாவது, நல்ல குடியில் பிறந்தமை, உருவம், செல்வம், அன்பு, பருவம் முதலியவற்றால் தலைவன், தலைவி இருவரும் ஒத்த தன்மையுடையவராய் இருத்தல் வேண்டும் என்கிறது.

**கற்பு மணம்**

ஒத்த பண்புடைய தலைவனும், தலைவியும் பலர் முன்னிலையில் திருமணம் செய்து கொள்வதே கற்பு, பணம், திருமணம் எனப்படும், இதனைத் தொல்காப்பியம்

**கற்பெனப் படுவது கரணமொழி புணரக்**

**கொலற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**

**தொண்டக்குழி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே (மேலது, நூ. 110)**

என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு கற்பு என்பது தலைவன் தலைவியிடத்தும், தலைவி தலைவனிடத்தும் மட்டுமே அன்பு கொண்டு வாழ்வதனைக் குறிப்பதாகும். கணவனையே தெய்வமாகத் தொழும் பாங்கு அன்றைய மகளிடம் இருந்தது. பிற ஆடவரைக் கண்டால் கூட கற்பு போய்விடும் என்ற நிலையில் இருந்தனர். எவன் ஒருவனைக் கண்டு ஒரு பெண் மனதினை பறிகொடுக்கிறாளோ இது தெய்வத்தின் நிகழ்வு என்று அவனையே திருமணம் செய்கின்றார். இதனையே கம்பர்,

**எண்ண அரு நலத்தினாள் இணையர் நின்றுழி**

**கண்ணொடு கண்இணை கல்வி, ஒன்றை ஒன்று**

**உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**

**அண்ணலும் நோக்கினான்; அவரும் நோக்கினாள் (கம்பராமாயணம், ப. 84)**

என்ற வரிகள், சீதை, இராமனைக் கண்களால் கண்டாள் கண்ட நொடியிலிருந்து அவனையே எண்ணி திருமணமும் செய்து கொண்டாள் என்பதை உணர்த்துகின்றன.

**மங்கல நாண்**

தலைவன் தலைவி இருவருக்கும் திருமணம் நடத்தும் பொருட்டு தலைவியின் கழுத்தில் தலைவன் மங்கலநாண் அணிவிப்பது பழந்தமிழரின் பண்பாடாகும். இம்முறை நெடுநல்வாடை வரிகள் மூலம் புலப்படுகிறது. அவரிகளானது,

**ஆரம் தாங்கிய அலர்முலை அகத்து**

**பின்னலை நெடுவீழ் தாழ (மூலநூல், ப. 76)**

என்று குறிப்பிடுகின்றது. அதாவது தலைவி முன்பு முத்துமாலையினை தம் மார்பிலே அணிந்திருந்தாள். ஆனால் இப்பொழுது தலைவனைப் பிரிந்ததால் தம் மார்பிலே குத்துகின்ற நீண்ட மங்கல நாண் மட்டுமே அணிந்திருக்கின்றார். இங்கு மங்கலநாண் பண்பாட்டின் அடையாளத்தினைக் குறிக்கின்றது. மங்கல நாண் என்பது தாலி என்றும் அழைக்கப்படும். இதனையே, முக்கூடற்பள்ளு என்னும் நூலில் மருதூர் பள்ளியை அறிமுகப்படுத்தும் பொழுது அவள் தாலி அணிந்திருந்தால் என்ற செய்தி குறிப்பிடுகின்றது. இதனை,

**நீலவடக் கல்லுடன் கோவைத்**

**தாலியும் இலங்க (முக்கூடற்பள்ளு, ப. 19)**

என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.

**பிரிவு**

அகப் பண்பாட்டினில் பிரிவு என்பதும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் மனமொத்த தலைவன், தலைவி இருவரும் பிரிவு நேரினும் கற்பு நெறி பிரியாமல் ஒருவரை ஒருவர் எண்ணிக் கொண்டு வாழ்வர். இப்பிரிவின் வகைகளைத் தொல்காப்பியம், “ஓதல் பகையே தூதிவை பிரிவே” முக்கூடற்பள்ளு நூல் பக. 29) என்கிறது. அதாவது தலைவன் கல்வி கற்கச்

செல்வதன் பொருட்டும் பகையின் காரணமாக போர் புரிவதற்காக செல்வதன் பொருட்டும், தூதின் காரணமாக செல்வதன் பொருட்டும் பிரிவு நிகழும் என்று குறிப்பிடுகின்றது. அவ்வாறு தலைவன் பிரிந்து செல்லும் பொழுது தலைவியை உடன் அழைத்துச் செல்வதில்லை. என்பதனை, "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" மேலது (ப.34) என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு தலைவியை விட்டு தலைவன் பிரிந்து செல்கையில் தலைவனோடு கூடியிருந்த நாட்களையும் பிரிந்து சென்ற நாட்களையும் எண்ணி தலைவி வருந்துவாள். இந்நிகழ்ச்சி நெடுநல்வாடையில் நிகழ்கின்றது. தலைவன் போரின் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்கின்றான். அவ்வாறு தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகின்றார். அதனை உணர்த்தும் விதமாய்,

**உரோகிணி நினைவன் நோக்கி நெடிதுஉயிரோ**
**மாஇதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப்பணி**
**செல்லிரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்**
**புலம்பொடு வதியும் நலங்கினர் அரிவைக்கு (மூலநூல், ப. 77)**

என்று பாடல் அமைகிறது. இதில் தோழியரும், செவிலியும் ஆறுதல் கூறியும் ஆற்று தவளாய் தலைவி வருத்தம் மிகுந்த கட்டிலில் படுத்துக்கிடக்க அக்கட்டிலின் மேலே மெழுகுத்;துணி ஓவியம் வரையப்பெற்றிருந்ததைக் கண்டாள். அதில் சந்திரனுடன் உரோகினி இநை;திருப்பதனைப் போன்ற ஓவியம் காணப்பட்டது. அதனைக் கண்ட தலைவி தானும் தலைவனோடு இவ்வாறு இணைந்திருக்க முடியவில்லை என்று எண்ணி வருந்தியமையால் அவர் கண்களில் இருந்து நீர் சிந்த அதனை சிவந்த விரல்களால் தெரிந்தாள். தலைவியைப் போன்று குறுந்தொகையிலும் ஒரு தலைவி தலைவனைப் பிரிந்ததும் வருந்துகின்றாள். இதனை,

**முட்டு வேண்சொல்? தாக்கு வேன்கொல்?**
**ஓரேன், யானும்; ஓர் வெற்றி மேலிட்டு**
**ஆஆ! ஒல் எனக் கூவு வேன்கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவுநோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே (குறுந்தொகை, ப. 41)**

என்ற பாடல் ஊர்pலுள்ள அனைவரும் உறங்க தலைவி மட்டும் பிரிவின் துயரால் முட்டவா, அலறவா என்று உறங்காமல் வருந்துகின்றாள். இவ்வாறு அகப்பண்பாடு அமைந்த விதம் உணர்த்தப்படுகின்றது.

**புறப்பண்பாடு**

புகழ், வீரம் இவற்றினை அடிப்படையாய் வைத்து அமைவதே புறம் எனப்படும்.

அறநெறி வழுவாமல் போர் செய்வது, கொடை உணர்வோடு பிறருக்கு உதவுதல் இறை வழிபாடு இவையே புறப்பண்பாடாய் விளங்குகின்றது.

**வழிபாட்டு முறை**

பண்டைத் தமிழர்கள் இயற்கை வழிபாட்டினையும் இறை வழிபாட்டினையும் மேற்கொண்டனர். சங்க காலத்தின் நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்து ஒவ்வொரு நிலத்திலும் ஒவ்வொரு கடவுள் என வணங்கி வந்தனர். இதனைத் தொல்காப்பியம்

**மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (மு.கூ.நூ, ப. 9)**

என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு இறைவனை வணங்கிவந்தனர்.

நெடுநெல்வாடையில் போர்க்களத்திற்குச் சென்ற தலைவன் வெற்றியோடு திரும்பி வரவேண்டும் என்று சொல்லி கொற்றவை தெய்வத்தை வேண்டுவதாக அமைகின்றது. இதனை,

**இன்னா அரும்படர் தீர விறல்தந்து**

**இன்னே முடிகதில் அமம் (மூலநூல், ப. 78)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு வெற்றி பெற வேண்டி கொற்றவை தெய்வத்தினை வணங்கும் செய்தியைத் தொல்காப்பியம்,

**மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த**

**கொற்றவை நிலவும் அத்திணைப் புறனே (மு.கூ.நூ, ப. 78)**

என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறே கொற்றவையை வணங்குதலை, "வலம்படு கொற்றத்து வாய்வாட கொற்றவை" (சிலப்பதிகாரம்) என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. நெடுல்நாடையில் .... இடத்தில் அரண்மனையை உருவாக்குகின்ற பொழுது தெய்வத்தை வணங்கினர் என்ற செய்தியும் இடம் பெறுகின்றது. இதனை,

**நூலறி புலவர் நுண்ணிதின் கயிறுஇட்டு**

**தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி (மூலநூல், ப. 71)**

எனும் வரிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு நூல்களை கற்கத் தெரிந்த புலவர்கள், தெய்வங்களை வணங்கி அரசனுக்கு அரண்மனை வசிக்கும் முறைப்படியினை அமைத்தமை புலனாகிறது. மேலும், இறைவனை வணங்கும் பொழுது மாலை நேரங்களில் பெண்கள் இல்லந்தோறும் விளங்கினை ஏற்றி, நெல், மலர் போன்றவை தூவி வணங்குவர். இந்நிலை இன்றைய காலக்கட்டம் மட்டுமின்றி அன்றைய காலக்கட்டத்திலும் இருந்தது. இதனை நெடுநல்வாடை,

**இரும்புசெய் விளக்கின் ஈந்திரிக் கொளிஇ**

**நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது**

**மல்லல் ஆவணம் மாலை அயர (மேலது, ப. 67)**

என்ற வரிகள் விளங்குகிறது. மாலை நேரத்தில் விளக்கு ஏற்றி வணங்கியமையை சிலப்பதிகாரம்.

**எல்வளை மகளிர் பணி விளக்கு எடுப்ப**

**மல்லல் மூதூர் மாலைவந்து இறுந்தென (மு.கூ.நூ., ப. 57)**

என்று குறிப்பிடுகின்றது. நெல்லும் மலரும்தூவி விரிச்சி கேட்டனர் என்பதை முல்லைப் பாட்டு,

**நெலொடு**

**நாழி கொண்ட நறுவீ முல்லை**

**அரும்பவிழ் அலரி தூஉய் (பத்துப்பாட்டு, ப. 122)**

என்று குறிப்பிடுகின்றது.

**அணிகலன்கள்**

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தையும், வளர்.... காட்டுவன அணிகலன்கள், அவ்அணிகள் அவர்தம் பண்பாட்டுகளையும் உணர்த்தும் கூறுகளாகும். ஆரம்பகாலத்தில் மலர்களையும் செடி, கொடிகளையும் ஆபரணமாக அணிந்திருந்தனர். காலம் செல்லச் செல்ல உலோகங்களால் ஆன அணிகலங்களை அணிந்தனர். பண்பைத் தமிழர்கள் முத்து, பவளம், சங்கு, வெள்ளி, தங்கம் போன்றவற்றில் அணிகலன் செய்து அணிந்தனர். அந்த அணிகலன்களை பூனை, இழை, கலம் என்று பல பெயர்களால் அழைத்தனர். பெண்கள் தலைமுதல் கால்வரை அணிகலன்களை அணிந்தனர். ஆண்களும் அணிகலன் அணிந்திருந்தனர்.

நெடுநல்வாடையில் மகளிர் சங்கு வளையலை அணிந்திருந்த செய்தி இடம் பெறுகிறது. இதனை, "வெள்ளி சௌ;ளி வீங்க இறைப்பணைத்தோள்" (மேலது ப.67) என்ற வரி குறிப்பிடுகின்றது. மேலும், மதுரை நகரத்து மகளிர் முத்துக்கள் பொருந்திய மாலை அணிந்திருந்தனர் என்பதை, "பரூவக்காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு" பத்துப்பாட்டு (ப.38) என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. இதனைப் போன்றே நெடுநல்வாடையின் தலைவி முத்தால் ஆன மாலை அணிந்திருந்தாள் என்பதை, "ஆரம் தாங்கிய அலர்மூலை ஆகத்து" மூலநூல் (ப.76) என்று கூறுகின்றது. தலைவனைப் பிரிந்ததால் தலைவி ..... துறந்தாள் என்பதும் பண்பாட்டின் நாயகனாக அமைகிறது. நெடுநல்வாடைத் தலைவி வளையலை அணியாமல் காப்புறாண் மட்டும் அணிந்திருந்தாள் என்பதை, "வலம்புரி வளையொடு கடிகை நூல்யாத்து" மேலது (ப.76) என்ற வரி உணர்த்துகிறது. காப்பு நூல் அணிந்து பண்பாட்டு நிகழ்வாகும். திருமுருகாற்றுப்படையில், "செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி" (மு.கூ.நூ. ப.17) எனும் வரியானது, செந்நூலை காப்பாகக் கட்டி வெண்மையான பொரிகளைத் தூவி கடவுளை வணங்கினர் என்ற கருத்துப் புலப்படுகிறது. காப்பு நூல் கட்டுதலை ஆண்டாள், "காப்புநாண் கட்டக் கனாக் கண்டேன் தோழிநான்" (ஸ்ரீ நாலாயிரந்திவ்வியப் பிரபந்தம், ப.203) என்று

திருமாலைத் திருமணம் செய்யும்போது காப்பு கட்டுவதாகக் கூறுகின்றார். இவ்வாறு காப்புட்டுதலை பண்பாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்தமையை அறிய முடிகிறது.

**போர் செய்திகள்**

ஒரு நாட்டினை சிறப்போடு ஆட்சி செய்ததை மன்னன் தம்முடைய நாட்டின் பகுதிகளை பெற்று கொள் தவா வரும் பொருட்டு அவனிடம் போர் புரிந்து தம்முடைய நாட்டினை பாதுகாத்துக் கொள்வான். இப்படிப்பட்ட அரசனது ஆநிரைகளை கவர்.... மண்ணைக் கைப்பற்றுதல் போன்றவற்றின் விளைவாக நிகழ்பவை ஆகும். போரின் போது பெண்கள், அந்தணர்கள், பசுக்கள் போன்றோர் அனுமதிக்கப்படவில்லை. போரில் வீரத்துடன் திகழ்வதும் அறநெறி ... போர் புரிவதும் ஆண்மகனின் செயலாகும். நெடுநல்வாடையில் பாசறையின் காண இருந்;த தலைவன், வீரர்களை பெற்ற விழுப்புண் கண்டு வருந்தி அவர்களுக்கு வீர உரைகளை கூறி, இரவுப் பொழுதும் உறங்காது அவ்வீரர்களுக்கு ஆறுதல் கூறி வருகின்றான். இதனை,

**நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**
**சிலரொடு திருதரும் வேந்தன்**
**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே (மூலநூல், ப. 79)**

என்ற வரிகள், தலைவியைப் பிரிந்த தலைவன் அவளை எண்ணி வருந்தாமல் நாட்டின் மீது அக்கறை உள்ளவனாய், சிறந்த போர் வீரனாய்த் திகழ்கின்றான். இந்நிலையே தொல்காப்பியத்திலும் இடம் பெறுகின்றன. தலைவன் நெடுமொழி கூறுவதனை, "தலைத்தாள் நெடுமொழி தன்னோடு புணர்த்தலும்" (தொல்காப்பியம், ப.81) என்ற வரி, போரின் போது பகை மன்னரிடமிருந்து ஆநிரைகளை மீப்பேன் மீட்காவிடில் தன் உயிரையே விடுவேன் என்று மன்னன் சூளுரைக்கின்றான். இவை, நாட்டின் மீது மன்னனுக்கு இருக்கின்ற அக்கறையினை குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

நெடுநல்வாடையில் பண்பாடு சார்ந்த செய்திகள் பல்வேறு அமைந்தமையே, இறைவழிபாடு, விளக்கேற்றி வணங்குதல், காதல் சார்ந்த ஒழுக்கப் பண்பு, அணிகலன்கள் வகை, மங்கலநாண் அணிதல் போன்ற கூறுகள் வாயிலாக அறிய முடிகின்றது. இத்தகைய பண்பாட்டுக் கூறுகள், அவர்தம் வாழ்வியலை அறிய துணை செய்யும் கூறுகளாக அமைந்தமையும் இக்கட்டுரை வழி ஆராயப்பட்டது எனலாம்.

**குறிப்புகள்**

[1] கதிர் மகாதேவன், *தமிழ்ப்பண்பாடு*, நடராஜ் பப்ளிகேஷன், புதிய எண் 64ஃ14 மீர்பக்தி அலி தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600014, முதற்பதிப்பு 1998.

[2] கதிர் முருகு (உ.ஆ), *முக்கூடற்பள்ளு மூலமும் உரையும்*, சாரதா பதிப்பகம், சென்னை-600014, மூன்றாம் பதிப்பு, ஜூலை-2009.

[3] சண்முகம் பிள்ளை.மு (உ.ஆ), *குறுந்தொகை*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுமதிப்பு – 1994.

[4] சுப்பிரமணியன் ச.வே.(உ.ஆ), *பத்துப்பாட்டு*, கோவினூர் மடாலயம், கோவிலூர் – 630307.

[5] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), *கலித்தொகை மூலமும் உரையும்*, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், பாண்டிபஜார், சென்னை-600 017, மறுமதிப்பு, ஆகஸ்ட் 2010.

[6] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), *சிலப்பதிகாரம்*, ஸ்ரீ எஸ்.எஸ். பிரிண்ட் ஹவுஸ், சென்னை – 600005. பதினைந்தாம் பதிப்பு, மார்ச் 1993.

[7] நாராயணசாமி ஐயர்.ஆ, *நற்றிணை நானூறு மூலமும் உரையும்*, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுமதிப்பு 2001.

[8] சோமசுந்தரனார்.போ.வே, *நெடுநல்வாடை*, மூலமும் உரையும், திருநெல்வேலி . தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை – 600108, 1984.

[9] தமிழ்முடி (உ.ஆ), *திருக்குறள் கருத்துரை*, தமிழ்முடி நிலையம், சென்னை – 600 078.

[10] தமிழண்ணல் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600105, இரண்டாம் பதிப்பு, அக்டோபர் 2006.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.